**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR**

**MCOP.No. 33/2019**

**Deposition of: R.W.1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **:** செங்கூட்டுவேல் | **Father Name :** | |
| **Village** | **:** | **Taluk** | **:** |
| **Nationality** | **:** | **Religion** | **:** |
| **Calling** | **:** | **Age** | **:** |

**Solemnly affirmed by in accordance with the provision of the Indian Oath Act 44 of 1969, on Date:11.01.2024 at 12.55 p.m to 01.00 p.m.**

முதல் விசாரணை:

1) நான் இவ்வழக்கின் 1-ஆம் எதிர்மனுதாரர். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். எமசாஆ.1 குறியீடு செய்கிறேன்.

மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை

1) விபத்து 24.02.2018 ல் நடந்தது என்பது எனக்கு இவ்வழக்கு அழைப்பாணை வந்த பிறகு தான் தெரியும். TN 30 Q 1522 என்ற வாகனத்திற்கு என் பெயரில்தான் காப்பீடு உள்ளது என்றால் சரிதான். ஆனால் அதை நான் கணேசன் என்பவருக்கு விற்றுவிட்டேன். .நான் உண்மையில் அவ்வாறு விற்று இருந்தால் என் பெயரில் காப்பீடு இருந்திருக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் அது தவறு. மேலும் விபத்து தேதியில் அந்த வாகனத்தின் பதிவு சான்று என் பெயரில்தான் இருந்தது என்றால் நான் அதை விற்றுவிட்டேன்.

2) நான் உண்மையில் விற்றுஇருந்தால் அதன் பதிவு சான்று வாங்கியவர் பெயரில்தான் இருந்திருக்க வேண்டும் என்றும் எனவே அதற்கு முரணாக நான் சாட்சியம் அளிப்பது ஏற்க முடியாது என்றால் அது தவறு. எமசாஆ.1 ல் என்

கையெழுத்து இல்லை. மேற்படி வாகனத்தின் பெயர் மாற்றம் வாங்கியவர் பெயரில் செய்ய நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேற்படி நான் மோட்டார் வாகன சட்டப்படி மேற்படி விபத்து நடந்த வாகனத்தின் உரிமையளார் நான்தான் என்றும் அதற்குதான் என் பெயரில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3) மேற்படி என்னுடைய வாகனத்தை கணேசன் எடுத்துச்சென்று கவனகுறைவாக ஓட்டி விபத்து ஏற்படுத்தியதால் அதன் உரிமையாளரான நான் காப்பீடு செலுத்துவதில் இருந்து தப்பிப்பதற்ககாக நானும், கணேசனும் சேர்ந்து மேற்படி எமசாஆ.1 ஐ மனுவிற்காக ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் அது தவறு.

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan**
**Accidents Claim Tribunal**
**Attur.**